2019/2020

ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School

# வளர் தமிழ் 5

## பயிற்சி 4

பெயர் ____________________________________________

*www.readingtamilschool.co.uk*

*admin@readingtamilschool.co.uk*

1. **பேச்சுப் பயிற்சி**

உனக்குப் பிடித்த பாடத்தைப் பற்றி விவரித்துச் சொல்லவும்.

2. **வாசித்தல்**

## பாரி

பண்டைக்காலத்திலே தமிழ்நாட்டில் பாரி என்ற ஒரு மன்னன் இருந்தான். அவன் உயிர்களிடத்தில் அன்புள்ளவன். அவனை எல்லோரும் வள்ளல் பாரி என்று அழைப்பர். பாரி பறம்பு மலைக்கும் அதைச் சூழவுள்ள முந்நூறு ஊர்களுக்கும் மன்னன். அவனது புகழ் கேட்டுப் பொறாமை கொண்ட மூவேந்தர் பாரியைக் கொன்று அவனது அரசைக் கைப்பற்றினர். பாரியின் மகள்மாரான அங்கவையும் சங்கவையும் கபிலர் என்ற புலவரால் காப்பாற்றப்பட்டு மறைவாக வாழ்ந்தனர்.

ஒரு நாள் ஔவையார் பாரி மகளிர் குடிசைக்கு வந்தார். அங்கவையும் சங்கவையும் தங்களது வறுமையையும் எண்ணாது பாட்டி ஒருவர் பசித்து வந்திருக்கிறாரே என்று எண்ணித் தினைமாவிலே உணவு சமைத்துப் பரிவுடன் உண்ணக் கொடுத்தனர். ஔவையார் அவ்வுணவை உண்டு மகிழ்ந்தார்.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

3. **பாடச் சொற்கள் (<u>பாடம் 4</u>)**

மூத்தவன் - Firstborn

அரசவை - Court

சினம் - Anger

துறத்தல் - Abdication

மலைத்து - Astonishment

இளையவன் - Younger

கணிகன் - Astrologer

உரிமை - Privilege

களைந்து - Remove

துறவி - Saint

4. **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுவோம்.**

- தமிழர்கள் தங்கள் ________________ போராட வேண்டும்.
  (பணத்துக்காகப், உறவினருக்காகப், உரிமைக்காகப்)

- நான் தமிழ்மொழி படிக்கிறேன். நீங்கள் தமிழ்மொழி ________________.
  (படி, படிக்கிறோம், படிக்கிறீர்கள்)

- பழமொழி: துறவிக்கு வேந்தன் ________________.
  (கரும்பு, துரும்பு, அரும்பு)

- குறள்: செயற்கரிய செய்வார் ____________________ சிறியர்
  செயற்கரிய செய்கலா தார்
  (பெரியர், பெறியர், ஆரியர்)

- சேர சோழ பாண்டியர்கள், ____________________ எனப்பட்டனர்.
  (மூவேந்தர், முவேந்தர், நால்வேந்தர்)

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

- கணிகன் என்ற சொல்லின் அர்த்தம் ________________.
  (மருத்துவர், ஆசிரியர், சோதிடன் )

- இளங்கோ அடிகள் ________________ நாட்டைச் சேர்ந்தவர்.
  (சோழ, சேர, பாண்டிய)

- தஞ்சைப் பெருங்கோவிலின் கோபுர அடுக்குகளில் ________________ நூற்றெட்டு கூத்து நிலைகளும் செதுக்கப்பட்டுள்ளன
  (முருகனுடைய, சிவனுடைய, பிள்ளையாருடைய)

- கவின் கலைகளில் மிகவும் சிறப்பு வாய்ந்தது ____________________ கலையாகும்.
  (ஓவியக், சிற்பக், நடனக்)

- ஒன்று பட்டால் உண்டு ________________.
  (மகிழ்ச்சி, சிறப்பு, வாழ்வு )

- திருக்குறளைப்________________ என்றும் கூறுவர்.
  (பொதுமறை, மறைநூல், நான்மறை)

- கற்றதற்கு அழகு ________________ பேசுதல்.
  (பிழையின்றிப், பிழையுடன், விரும்பியபடி)

- 500 என்பதை எழுத்தில் எழுதினால் ____________________.
  (ஐநூறு, ஐந்நூறு, ஐந்துநூறு)

- சிறுவன் புதியவரை ________________ பார்த்தான்.
  (ஏற இறங்கப், ஊன்உறக்கமின்றிப், அக்கம்பக்கத்தில்)

- கோடைகாலத்தில் மரங்கள் ________________ காட்சி அளிக்கும்.
  (காய்ந்து, கறுத்து, பசுமையாகக்)

- அக்கா ________________ சிற்பம் அழகாக இருக்கும்.
  (வரைந்த, செதுக்கிய, படித்த)

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

5. **பின்வரும் தலைப்புக்குப் பொருத்தமாகக் கட்டுரை எழுதவும்.**

**விலங்குகள்**

**திட்டமிடல்**

- விலங்குகளின் பெயர்கள் மற்றும் வகைப்படுத்தல். (முன்னுரை)
- விலங்குகள் காணப்படும் இடங்கள். (கருத்து)
- விலங்குகளின் குணங்கள். (கருத்து)
- எனக்குப் பிடித்த விலங்கு. (கருத்து)
- முடிவுரை

**முன்னுரை**

______________________________
______________________________
______________________________
______________________________
______________________________
______________________________

**கருத்து**

______________________________
______________________________
______________________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

**முடிவுரை**

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5

6. **பாட வினாக்களுக்கு விடை தருக.**

- சிலப்பதிகாரத்தை எழுதியவர் யார்?

___

___

- திருக்குறளின் மறுபெயர் என்ன?

___

___

- யாருடைய நட்பு எமக்குத் துன்பம் தரும்?

___

___

- கல்லாலான சங்கிலிகள் எங்கே காணப்படுகின்றன?

___

___

- ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற கதையில் சிங்கம் ஏன் ஓடியது?

___

___

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 5